بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்**

September 13 2013

**தமிழாக்கம் : மவ்லவி S. அப்துல் காதிர் சாஹிப்**

# சிரியாவின் நெருக்கடி

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இப்போது உலகத்தின் நிலை மிகவும் வேகமாக அழிவின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக சிரியாவின் நிலையின் காரணமாக சிரியா மட்டுமல்லாமல் அரபு உலகில் ஏற்பட்டுள்ள நிலையின் கரணமாக இந்த அழிவு இன்னும் அதிகமாக பரவக்கூடும். சிரியாவின் போரில் பிற அந்நிய சக்திகள் பங்கெடுத்தால் அரபு நாடு மட்டுமல்லாமல் சில ஆசிய நாடுகளுக்கும் மிக அதிகமாக இழப்பு ஏற்படும். இதை அரபு உலகமும் புரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை. அவ்வாறே பிற நாடுகளும், பெரிய சக்திகளும் புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. இந்த போர் சிரியாவுடன் நின்றுவிடாது. மாறாக இது ஓர் உலகப் போருக்கான முன்னோட்டமாக அமைய வாய்ப்புள்ளது.

ஆகவே, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை ஏற்றுக் கொண்டுள்ள அஹ்மதிகளாகிய நாம், நமது எஜமானரும் முன்னோடியுமாகிய ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களைப் பின்பற்றி உலகை இறைவனுடன் இணைப்பதற்காகவும், அமைதி மற்றும் சகோதரத்துவத்தை உருவாக்குவதற்காகவும் தோன்றிய நபரை ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக மிகவும் அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். நம்மிடம் துஆ செய்வதைத் தவிர வேறு வழியும் இல்லை. இதைக் கொண்டு தான் நாம் உலகை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

வெளிப்படையான முயற்சி என்ற அடிப்படையில் நாம் உலகிற்கும், பெரும் சக்திகளுக்கும் இந்த அச்சுறுத்தும் தீய விளைவுகளைப் பற்றி எச்சரிக்க முடியும். அதைச் செய்தும் வருகிறோம். இது நம்முடைய வெளிப்படையான முயற்சிகளாகும். உலக அரசியல்வாதிகளையும், அரசுகளையும் என்னால் முடிந்தவரை எச்சரித்து வருகிறேன். மேலும் இந்த தூதுச் செய்தியை ஜமாஅத் உறுப்பினர்களும் என்னுடன் சேர்ந்து மிக விரிவான முறையில் உலகத்தின் பல்வேறு நாடுகளில் பரப்பினர். இந்த தலைவர்களும், அரசியல்வாதிகளும், உங்கள் தூதுச் செய்தி சரியான நேரத்தில் தரப்பட்ட தூதுச் செய்தியாகும் என்று மிகவும் ஆவேசத்துடன் தமது கருத்தை தெரிவிக்கின்றனர். உங்களது இந்த கருத்தை நாங்கள் ஆமோதிக்கிறோம் என்றும் கூறுகின்றனர். ஆனால் இந்த தூதுச் செய்தியின்படி செயல்படுவதற்கான நேரம் வரும்போது பெரிய சக்திகளின் முன்னுரிமைகள் மாறி விடுகின்றன.

ஆனால் நான் முன்னதாகக் கூறியதன்படி இவை நாம் செய்யும் வெளிப்படையான முயற்சிகளாகும். எந்தவொரு பணியைச் செய்வதற்கும், அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கும் நம் வசமுள்ள உண்மையான ஆயுதம் துஆ மட்டுமே ஆகும். அஹ்மதிகள் இந்த நிலையில் இதன் பக்கம் மிகவும் அதிகமாக கவனம் செலுத்துவது அவசியமாகும். அழிவிலிருந்து தப்பிப்பதற்காக, முஸ்லிம் சமுதாயத்திற்கு குறிப்பாகவும் நாம் துஆ செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்றிலிருந்து 88 ஆண்டுகள் முன்பு 1925-ல் அப்போதிருந்த சிரியாவின் நிலையைக் கருத்தில் கொண்டு ஒரு குத்பா கொடுத்தார்கள். டமாஸ்கஸ் நகரத்தின் வரலாறு மிகவும் பழமையானது. இஸ்லாத்திற்கு முன்பும் இந்த நகரம் பல மார்க்கங்களுக்கு மையமாகவும் விளங்கியது அல்லது இதற்கு முக்கியத்துவம் இருந்து வந்தது. இஸ்லாத்திலும் மிக நீண்ட காலமாக இந்த நகரம் கிலாஃபத்தின் தலைமை இடமாக இருந்துள்ளது. பழைய மதங்களின் நினைவிடங்கள் இந்த நகரத்தில் அதிகமாக இருந்தது என்று கூறினார்கள். 1925 -ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த ஊரைப் பற்றி அல்லது சிரியாவைப் பற்றி குத்பா கொடுப்பதற்கான காரணத்தையும் எடுத்துக் கூறினார்கள்.

துருஸ் என்ற ஒரு கோத்திரம் அங்கு இருந்தது. அவர்கள் சுதந்திரம் வேண்டி குரல் கொடுத்தனர். இத்துடன் அங்குள்ள முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டனர். அவர்கள் மலையில் வசிப்பவர்களாவர். மேலும் நகர்புறங்களில் வசித்து வந்த முஸ்லிம்களும் அந்த சுதந்திரப் போராட்டத்தில் இணைந்தனர். அந்த சமயத்தில் அங்கு பிரெஞ்சு அரசு ஆட்சியில் இருந்தது.

அந்த குத்பாவில் அவர்கள் கூறினார்கள்: பிரெஞ்சு அரசு அங்கு ஆட்சியில் இருந்தாலும் சில தீர்ப்புகள் வழங்குவதில் முஃப்தி அல்லது மவலவிகளும் ஆட்சி நடத்தி வந்தனர். இவ்வாறு அங்கு இரண்டு அல்லது மூன்று வகையான ஆட்சியாளர்கள் இருந்தனர். ஆனால் அரசியல் ரீதியாக பிரெஞ்சு அரசு ஆட்சியில் இருந்தது. முஃப்திக்கு இருந்த அதிகாரம் எந்த அளவுக்கு இருந்ததென்றால், மார்க்கக் கருத்துக்களைக் கொண்ட ஒரு நூல் வெளியிடுவதாக இருந்தாலும் அல்லது வேறு ஏதேனும் வெளியீடுகளுக்கு அனுமதி இருந்தால் அது தொடர்பாக முஃப்தி ஏதேனும் கூறி விட்டால் பிறகு கவர்னர் கூட ஏதும் செய்ய முடியாத அளவிற்கு முஃப்திக்கு அதிகாரம் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கு ஓர் உதாரணம் கூறினார்கள். அதாவது அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக நூல்கள் வெளியிடுவதற்கு கவர்னரிடம் அனுமதி கேட்டு அதை அச்சடித்தும் விட்டார்கள். ஆனால் முஃப்தி அதற்கு தடை விதித்து விட்டார். இது தொடர்பாக கவர்னரிடம் புகார் கொடுத்த போது எனக்கு இவ்விசயத்தில் எந்த அதிகாரமும் இல்லை. முஃப்திக்கு தான் இதற்கான அதிகாரம் உள்ளது என்று கூறிவிட்டார். நிர்வாகம் மட்டும் தான் பிரெஞ்சு அரசாங்கத்திடம் இருந்தது. அரசியல் ரீதியாக யாரேனும் குரல் கொடுத்தால் அது மிகவும் வன்மையாக தீர்வுக்கு கொண்டு வரப்பட்டது. அப்போது இதற்கு எதிராக கிளர்ச்சியில் அல்லது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் குரல் எழுப்பப்பட்ட போது, பிரெஞ்சு அரசு மிகப்பெரிய வான்வழித் தாக்குதல் நடத்தியது. 57-58 மணி நேரங்கள் குண்டு மழை பொழிந்தது என்று கூறப்படுகிறது. நகரத்திலிருந்த வரலாற்றுச் சிறப்புவாய்ந்த கட்டிடங்களெல்லாம் தகர்க்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

அந்த நகரம் ஏன் அழிக்கப்பட்டது? ஏன் அந்த மக்கள் கொல்லப்பட்டனர்? இதற்கு காரணம் அம்மக்கள் அந்நிய சக்தியிடமிருந்து சுதந்திரம் வேண்டினர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஓர் இல்ஹாமும் உள்ளது. அதாவது [illegible] ‘பலாயே தமிஷ்க்’.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த சமயம் நிகழ்த்தப்பட்ட வான்வழித் தாக்குதல் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த இல்ஹாம் பூர்த்தியாகி விட்டது. எல்லா வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டிடங்களும், எல்லா மார்க்க வரலாறும் அழிக்கப்பட்டது. ஏனெனில் இதை விட பெரிய அழிவும் சோதனையும் டமாஸ்கஸ் நகருக்கு இதற்கு முன் நேர்ந்ததே இல்லை. இந்த சோதனை பிரெஞ்சு என்ற அந்த அந்நிய ஆட்சியாளர்களால் நேர்ந்தது. சில இல்ஹாம்கள் பலமுறை நிறைவேறுகின்றன. அந்நியர்களின் கையால் வந்த அந்த சோதனை நகரங்களையெல்லாம் அழித்து விட்டது. அது 57 அல்லது 58 மணி நேரங்கள் இருந்தது. அதில் 2000 பேர் கொல்லப்பட்டதாக ஒருவர் கூறுகிறார். 20000 பேர் கொல்லப்பட்டார்கள் என்று இன்னொருவர் கூறுகிறார். ஆனால் எவ்வாறிருப்பினும் ஏறக்குறைய 7000 அல்லது 8000 பேர் அந்த சமயத்தில் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

இந்த சோதனை அந்நியர்களின் கைகளால் வந்தது. அதில் இந்த இழப்பு ஏற்பட்டது. ஆனால் இப்போதும் ஒரு சோதனை வந்துள்ளது. இது (அந்நியர்களால் அல்ல) நம்மவர்களின் கைகளால் வந்துள்ளது என்று மிகவும் கவலையுடன் கூற வேண்டியதுள்ளது. கடந்த ஏறக்குறைய இரண்டு, இரண்டரை வருடங்களாக டமாஸ்கஸ் நகரிலும் சிரியாவிலும் அழிவைப் பரப்பி வருகிறது. முழு சிரியாவையும் இது தன் பிடியில் கொண்டு வந்து விட்டது. ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் கொல்லப்பட்டு விட்டனர். சிலர் இன்னும் அதிகமான எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். மில்லியன் கணக்கான மக்கள் வீட்டை இழந்து தவிக்கின்றனர். வீடுகளும் நாசமாகி விட்டன. கடை வீதிகளும் அழிந்து வருகின்றன. தலைமைச் செயலகத்தின் மீதும் குண்டுகள் போடப்பட்டுள்ளன. விமான நிலையங்களிலும் குண்டு மழை பொழிந்துள்ளது. இன்னும் பல்வேறு கட்டிடங்கள் மீது குண்டுகள் போடப்பட்டுள்ளன. சுருக்கமாக கூறுவதென்றால் யாரும் அங்கு பாதுகாப்பாக இல்லை.

அரசாங்க இராணுவம் பொதுமக்களைக் கொன்று குவிக்கின்றது. பொதுமக்கள் அரசாங்கப் பணியாளர்களைக் கொல்கின்றனர். இதில் இராணுவமும் பிறரும் இணைந்துள்ளனர். அலவிகள் சுன்னிகளையும் சுன்னிகள் அலவிகளையும் கொன்று வருகின்றனர். இந்த அனைத்து மக்களும் ஒரே கலிமாவை ஓதுவதாக வாதம் புரிகின்றனர். சுதந்திரம் என்ற பெயரில் அங்கு நடக்கின்ற இந்த முயற்சியில் அரசாங்கத்தை எதிர்க்கின்ற

பொதுமக்களில் பெரும் எண்ணிக்கையில் சுன்னிகள் உள்ளனர். இவர்கள் செய்கின்ற முயற்சியில் இவர்களுக்கு உதவி செய்கின்றோம் என்ற பெயரில் தீவிரவாத இயக்கங்களும் சேர்ந்துள்ளன. இந்த தீவிரவாத இயக்கங்களால் இந்த நாட்டுக்கு ஏற்படும் தீங்கு இவர்களுக்கு பின்னால் தெரியும். எவ்வாறிருப்பினும் இம்முறை வந்துள்ள இந்த சோதனை அச்சத்திற்குரிய வடிவத்தை மேற்கொண்டு வருவது கவலையைத் தருகிறது.

சுதந்திரம் என்ற பெயரில் பொதுமக்களும், அமைதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் அரசாங்கமும் ஒருவர் மீது ஒருவர் அநீதியிழைத்து, ஒருவருக்கொருவர் சண்டையிடுவதால் இவர்கள் எவ்வளவு பலவீனமடைந்து வருகிறார்கள் என்று இவர்களுக்கு தெரியாது. சுதந்திரம் பெற்றுத் தரவும், அநீதியை ஒழிக்கவும் அமைதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் தமது சுய இலாபத்தை அடைவதற்கு சில பெரிய அந்நிய சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. ஆனால் இந்த முயற்சிகள் முழு உலகத்தையும் அழிவின் பிடியில் கொண்டு வந்து விடும் என்று இவர்களுக்கு தெரியாது.

சிரியா அரசுடன், சில பெரிய அரசுகள், அவ்வாறே சிரியாவுக்கு உதவி செய்யும் அந்த பகுதியைச் சேர்ந்த சில நாடுகள் ஒரு தரப்பிலும், அதுபோன்று எதிரணியில் சிரியாவுக்கு எதிரான நாடுகளும் நிற்கின்றன. பெரிய சக்திகள் எதிரணியில் அதிகமாக இருக்கின்றன. இந்த சூழ்நிலை மிகவும் ஆபத்தான நிலையாக உருவெடுத்து விட்டது. ஆனால் முஸ்லிம் நாடுகளின் மீது தான் பரிதாபம்! முழுமை அடைந்து விட்டது என்று அல்லாஹ் கூறிய அந்த போதனையைத் தாம் பின்பற்றுகிறோம் என்று இவர்கள் வாதிக்கின்றனர். மேலும் சிறந்த சமுதாயம் என்று அல்லாஹ் கூறிய அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தம்மை வாதிக்கின்றனர். இன்று இந்த முஸ்லிம் நாடுகள் என்ன சிறந்த காரியத்தைச் செய்து வருகிறது? அனுதாப உணர்வு இல்லை. போதனையின் எந்த பகுதியின்படியும் செயல்பாடு இல்லை. ரோசம் முற்றிலும் இல்லாமல் போய் விட்டது. அந்நியர்களிடம் உதவி வேண்டப்படுகிறது. இந்த உதவியும் தம் மக்களை அழிப்பதற்காகவே வேண்டப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலை உருவானால் திருக்குர்ஆன் என்ன போதிக்கிறது? இரண்டு பிரிவினர் சண்டையிட்டால் என்ன செய்ய வேண்டும்? அல்லாஹ் என்ன கூறுகிறான்? திருக்குர்ஆன் கூறுகிறது:

وَإِنْ طَآئِفَتٰنِ مِنَ الْمُؤْمِنِيْنَ اقْتَتَلُوْا فَأَصْلِحُوْا بَيْنَهُمَا ۚ فَإِنْ بَغَتْ إِحْدٰهُمَا
عَلَى الْأُخْرٰى فَقٰتِلُوا الَّتِيْ تَبْغِيْ حَتّٰى تَفِيْٓءَ إِلٰٓى أَمْرِ اللّٰهِ ۚ فَإِنْ فَآءَتْ
فَأَصْلِحُوْا بَيْنَهُمَا بِالْعَدْلِ وَأَقْسِطُوْا ۚ إِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ ۝

*நம்பிக்கையாளர்களுள் இரு பிரிவினர்கள் தங்களுக்குள் போர் செய்தால் அவ்விரண்டு பிரிவினர்களுக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள். இதன் பின்னர் அவற்றுள் ஒன்று மற்றொன்றிற்கு எதிராக வரம்பு மீறினால், வரம்பு மீறுகின்ற பிரிவினர் அல்லாஹ்வின் கட்டளையின்பால் திரும்பி வரும் வரை நீங்கள் அவர்களை எதிர்த்துப் போர் செய்யுங்கள். பின்னர் அவர்கள் திரும்பி வந்து விட்டால் அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானம் செய்து, நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீதியுடன் நடந்து கொள்பவர்களை நேசிக்கின்றான். (49:10)*

அல்லாஹ் கூறுகிறான்: அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானம் செய்து நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். நீதிக்கான உயர்வான தரத்தையும் அல்லாஹ் வகுத்துள்ளான். இன்னோரிடத்தில் கூறுகிறான்: எந்தவொரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியை விட்டு தடுக்க வேண்டாம். உலக ஆசைகளுக்குப் பதிலாக உங்களுக்கு அல்லாஹ்வின் அன்பு தான் வேண்டுமென்றால் ஒருவருக்கொருவர் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டிய முஸ்லிம்களின் கடமையாகும். மேலும் அந்நியர்களுடனும் நீதியை நிலைநாட்டுங்கள்.

(5:9) هُوَ أَقْرَبُ لِلتَّقْوٰى இதுவே இறையச்சத்திற்கு மிகவும் நெருங்கியது. இறையச்சத்தைத் தேடுங்கள். இறையச்சத்தைத் தேடுங்கள் என்பதே முஸ்லிம்களுக்கு மீண்டும் மீண்டும் வழங்கப்பட்ட கட்டளையாகும்.

வெட்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், இஸ்ரேல் நாட்டின் தலைவர் இவ்வாறு ஆலோசனை கூறுகிறார். இது உண்மையில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வந்திருக்க வேண்டும். முஸ்லிம் நாடுகளின் தலைவர்களுக்கு இந்த சிந்தனை வரவில்லை. இஸ்ரேலின் தலைவர் மேற்கத்திய சக்திகளுக்கு ஆலோசனை கூறியபோது முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு இவ்வாறு அறிவித்திருக்க வேண்டும். அதாவது எங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை நாங்களே சரிசெய்து கொள்வோம். குறிப்பாக எங்களுடைய மார்க்கத்தைச் சேர்ந்த நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சனையை நாங்களே தீர்த்துக் கொள்வோம். நாங்கள் ஒரே இறைவனை

வணங்குபவர்கள் ஆவோம். நாங்கள் ஒரே தூதரை ஏற்றுக் கொண்டுள்ளவர்களாவோம்; நாங்கள் ஒரே வேதத்தின் போதனையின்படி செயல்படுபவர்களாவோம். அந்த வேத நூலையே எங்களுடைய வழிகாட்டியாக நம்புகின்றவர்களாவோம். எங்களுக்குள் கருத்து வேற்றுமை உருவாகியுள்ளது என்றால், ஒரு நாட்டில் இரண்டு பிரிவினர்கள் மத்தியில் சண்டை அல்லது பொதுமக்களுக்கும் அரசுக்கும் மத்தியில் சண்டை ஏற்பட்டுள்ளது. அது ஆகுமானதாகவோ அல்லது தகாததாகவோ எப்படி இருந்தாலும் நாங்கள் எங்களது முழுமையான போதனையின்படி இந்த பிரச்சனையை சரிசெய்து கொள்வோம். ஒரு பிரிவினர் வரம்பு மீறினால் அந்த வரம்பு மீறுதலைப் போக்குவதற்காக எங்களுக்கு வேற்று சக்திகளின் உதவி தேவைப்பட்டால் தொழில்நுட்ப உதவி அல்லது ஆயுத உதவி ஆகியவற்றைப் பெறுவோம். ஆனால் செயல்பாடு எங்களுடையதாக இருக்கும். மேலும் செயல்படுத்துபவர்களும் எங்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். இந்த குழப்பத்தையும் பிரச்சனையையும் சரி செய்து கொள்வதற்காக அவர்களை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம். இந்த சிந்தனை இருந்தால், முஸ்லிம் நாடுகளின் பக்கம் பார்வையை உயர்த்திப் பார்ப்பதற்குக் கூட அந்நியர்களுக்கு தைரியம் ஏற்பட்டிருக்காது.

ஆயிரக்கணக்கான மைல் தூரம் உட்கார்ந்து கொண்டு பிற நாட்டின் அமைதியின் மீது அக்கரை காட்டுவதற்கு என்ன ஆர்வம் இருக்கிறது? ஒன்று அந்த நாட்டின் செல்வத்தை அபகரிப்பதற்காக அல்லது உலகில் தனது எதிரி சக்தியின் மீது தன் பலத்தைக் காட்டி ஏழையாகவும், சிறியதாகவும் இருக்கின்ற குழப்பம் உள்ள நாட்டை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து தன் பெருமையைக் காட்டுவதற்காக இதில் ஆர்வம் காட்டுகிறது.

எவ்வாறிருப்பினும் இது முஸ்லிம் நாடுகளின் பலவீனமாகும். தமது போதனையை மறந்ததன் விளைவாகும். அந்நியர்கள் இந்த அளவுக்கு தைரியம் காட்டுகின்றனர். ஒரு நாடு இவ்வாறு கூறுகிறது. சிரியாவின் மீது தாக்குதல் நடத்த U.N.O. அனுமதி வழங்கா விட்டாலும் நாங்கள் தாக்குதல் நடத்துவோம். இது எங்களது உரிமையாகும். இந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக கொடுக்கப்படும் ஆதாரம் சிறுபிள்ளைத்தனமாக உள்ளது. அதாவது எங்களது Foreign Policy –ஐ U.N.O. கட்டுப்படுத்த முடியாது என்கிறது. இங்கு Foreign Policy –க்கு என்ன சம்மந்தம் இருக்கிறது? எதிர்ப்பு சிந்தனை அதிகமாகி கண்களில் திரையிடப்பட்டால் படித்தவர்கள் கூட அறிவில்லாமல் பேசுகின்றனர். இவர்கள் மிகவும் புத்திசாலிகள் என்று எண்ணி நாம் இவர்களைப் பார்த்தால் மிகவும் அறிவீனமாகப் பேசுகின்றனர்.

நீ ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பால் உட்கார்ந்திருக்கிறாய். உனக்கு இந்த பிரச்சனையில் எந்த சம்மந்தமும் இல்லை. சம்மந்தம் இருக்கிறது என்றால் இருக்க வேண்டும் என்றால் U.N.O. –க்கு தான் சம்மந்தம் இருக்கிறது. ஏனென்றால் இந்த நாடுகள் U.N.O. –வின் Charter –ல் ஒப்பந்தத்தில் சேர்ந்துள்ளது. எந்தவொரு தனிப்பட்ட நாட்டுடனும் எவ்வித ஒப்பந்தமும் இல்லை. உறவும் இல்லை. குழப்பம் எந்த நாட்டில் நிலவுகிறதோ அங்கிருந்து நேரடியாக எந்த ஆபத்தும் இல்லை. இங்கு Foreign Policy –க்கு என்ன சம்மந்தம் இருக்கிறது? இதிலுள்ள Logic –ஐ என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது வெறும் பிடிவாதமாகும். தனது மேன்மையை வல்லமையை நிறைவேற்ற இது ஒரு திட்டமிட்ட இழிவான முயற்சியாகும்.

உலகத்தில் அமைதி இப்படி நிலவுவதில்லை. அமைதியை நிலைநாட்டுவதற்காக இஸ்லாத்தின் போதனையைப் போன்று வேறு எந்த அழகிய போதனையும் இல்லை. எந்தவொரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியை விட்டு விலக்கி விட வேண்டாம். இது தொடர்பாக நான் மீண்டும் மீண்டும் உலகத் தலைவர்களுக்கு கவனமூட்டினேன். இதன்படி செயல்பட்டால் மட்டுமே அமைதி நிலவ முடியும். நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தின்படி செயல்பட்டால் மட்டுமே அமைதி நிலவ முடியும். U.N.O. இந்த கோட்பாட்டின் படி நீதியை நிலைநாட்டினால் தான் நீதி நிலைபெற முடியும். அநீதி எங்காவது தென்பட்டால் எல்லா நாடுகளும் இணைந்து முயற்சி செய்ய வேண்டும். வீட்டோ உரிமை இருக்கிறது அல்லது விருப்பப்படி யாரும் எதுவும் செய்யலாம் என்பது அல்ல. இங்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் Foreign Policy –வுடன் எந்த சம்மந்தமும் இல்லை.

பிறகு இன்னொரு நாடு இவ்வாறு கூறுகிறது:

நாங்கள் சிரியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக தரைவழி இராணுவத்தை அனுப்பமாட்டோம். ஆனால் வான்வழித் தாக்குதல் நடத்துவோம். அதாவது அந்த நகரம் மற்றும் நாட்டையே இதற்கு முன்னால் செய்ததைப் போன்று முழுமையாக அழித்து தரைமட்டமாக்கி விடுவோம். அப்பாவி பொதுமக்களையும் கொல்லுவோம். குழந்தைகளையும் பெண்களையும் கொன்று விடுவோம். ஈராக்கிலும், லிபியாவிலும் செய்தது போன்று இங்கும் கொன்டு குவிப்போம் என்கிறது. அங்கே அவர்களுக்கு என்ன கிடைத்தது? இங்கே கிடைப்பதற்கு? நகரம் இடிந்து தரைமட்டமாகி விட்டது. ஆனால் அமைதி இன்னும் நிலைபெறவில்லை. இவர்களிலிருந்தே அல்லாஹ் இதற்கு தடையும் விதித்துள்ளான்.

ரஷ்யாவின் பிரதமர் நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார் அல்லது கட்டுரை எழுதியுள்ளார். அதாவது தனிப்பட்ட முறையில் நீங்கள் எடுக்கும் முடிவு மிகவும் அநியாயமானதாகும். இவ்வாறு தான் முடிவெடுக்க வேண்டும் என்றால் U.N.O.–ஐ எதற்காக ஏற்படுத்தியுள்ளீர்கள்? அவர் இந்த தூதுச் செய்தியை மீண்டும் மீண்டும் அவ்வப்போது உலகிற்கு தெரிவித்துக் கொண்டிருக்கிறார். அதாவது இதே நிலை நீடித்தால் U.N.O. –வின் முடிவும் League of Nations –க்கு ஏற்பட்டது போன்றே இருக்கும் என்றார்.

நிச்சயமாக அவர் சரியாகத்தான் கூறியுள்ளார். பிறகு எகிப்திலும் அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டனர். அங்கு பொதுமக்களின் உரிமைகள் செலுத்தப்படவில்லை என்றே கூறப்பட்டது. அரசு தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக பொதுமக்களை இரக்கமின்றி கொலை செய்கிறது என்று கூறப்பட்டது. அரசின் போக்கு தவறாகும் என்பது உண்மை தான்.

ஆனால் எகிப்தில் அரசை வீழ்த்திய பிறகு இப்போது ஆட்சிக்கு வந்த அரசு தீவிரவாதத்தை விரும்புபவர்கள் மற்றும் மார்க்க வெறியர்களின் அரசாகும். இனி என்ன நடக்கும்? என்று பெரிய சக்திகளுக்கு கவலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஒரு பெரிய பத்திரிகையைச் சேர்ந்த பத்திரிகையாளர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். அதாவது எகிப்தில் இனி அமைதி திரும்புவதற்கான என்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன? என்று கேட்டார். அதற்கு நான் இதைத் தான் கூறினேன். அதாவது நீங்கள் உங்களுடைய தாக்கத்தை நிலைநாட்டுவதற்காக அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டீர்கள். ஆனால் உங்களுடைய கணிப்பு தவறாகி விட்டது. இப்போது அரசு பொறுப்பில் வந்தவர்கள் உங்கள் விருப்பப்படி செயல்படுபவர்களும் அல்ல. அங்குள்ள பொதுமக்களின் விருப்பப்படி செயல்படுபவர்களும் அல்ல. இப்போதும் பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் இந்த அரசுக்கு விரோதமாகவே உள்ளனர். இன்றும் அங்கு நெருப்பு எரிந்து கொண்டுதான் இருக்கிறது. நீங்கள் பாருங்கள்! மீண்டும் சில மாதங்களுக்குள் அங்கே முன்பைப் போன்று இரத்தம் சிந்திப்படும். ஆனால் நான் கணித்ததை விட மிகவும் சீக்கிரமாகவே இரத்தம் சிந்தப்பட்டு விட்டது. கடந்த நாட்களில் இருந்த எகிப்தின் நிலை நம் கண்களுக்கு முன்னால் இருக்கிறது.

முஸ்லிம் நாடுகளில் நிம்மதியின்மைக்கு என்ன காரணம் இருந்தாலும், அது ஒருவகையில் பொதுமக்கள் சார்பாக பார்க்கும் போது ஆகுமானது என்றாலும் பெரிய சக்திகள் தவறாக இதில் தலையிட்டால் பெரிய அளவு குழப்பம் ஏற்படும். நான் 2011 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இது தொடர்பாக இரண்டு மூன்று குத்பாக்கள் கொடுத்தேன். அதில் நான் விளக்கமாக எடுத்துக் கூறினேன். அதாவது பெரிய சக்திகள் அமைதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் வெளிப்படையாக அல்லது அந்தரங்கமாக என்ன முயற்சிகளைச் செய்வதற்காக செயல் திட்டங்களை வகுத்தாலும் அதனால் இறுதியில் முஸ்லிம்களுக்கு இழப்பு மட்டும் தான் ஏற்படும். இந்த பெரிய சக்திகள் ஒருபோதும் தம் சுயநலனிற்கு பாதிப்பு ஏற்பட விடாது. இப்போது நீங்களே பாருங்கள்! ஹோஸ்னி முபாரக்கின் காலத்தில் ஏற்பட்ட கொலைகளின் சம்பவத்தில் பொதுமக்களுக்கு ஆதரவு அளித்து அவரை பதவியை விட்டு விலக்கினர். அதற்காக முயற்சி செய்தனர். மாபெரும் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் பிறகு வந்த அரசும் மக்கள் நலனை கவனிக்கவில்லை. இராணுவ ஆட்சி வந்தது. அது முன்பை விட அதிகமாக இரத்தம் சிந்தியது. அப்போது யாரும் பொதுமக்களுக்கு ஆதரவு வழங்கவில்லை. எந்த முயற்சியும் செய்யவில்லை. இது இரண்டு வகையான போக்காகும். இதில் வித்தியாசம் உள்ளது.

எவ்வாறிருப்பினும், முஸ்லிம் நாடுகள் இப்போதாவது ரோசம் கொள்ள வேண்டும். தமது சுயநலத்தைக் கைவிட்டு விட்டு ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்தின் பலனைப் பார்க்க வேண்டும். ஆனால் உள்ளத்தில் இறையச்சம் உருவானால் மட்டுமே இது சாத்தியமாகும். ஆட்சியாளர்களின் உள்ளத்திலும் பொதுமக்களின் உள்ளத்திலும் இறையச்சம் உருவாக வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதான நேசம் என்ற வாதத்துடன் அந்த உயரிய முன்மாதிரியின் படி செயல்படும் போது தான் இது சாத்தியமாகும். ஆட்சியாளர்களும் பொதுமக்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் வேதனையை உணர்ந்தவாறு அவர்களின் போதனையின் படி செயல்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் போதனைகளுள் சிலவற்றை நான் எடுத்து வைக்கிறேன். இதில் ஆட்சியாளர்களுக்கும் அவர்களது பொறுப்புகள் மற்றும் கடமைகளின் பக்கம் கவனமூட்டுகிறார்கள். மக்களுக்கும் கவனமூட்டுகிறார்கள். முதலில் ஆட்சியாளர்கள் தொடர்பாக சில ஹதீஸ்களை எடுத்துரைக்கின்றேன்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கின்றார்கள்:**

அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இல்லாத அந்த நாளில் அல்லாஹ் ஏழு நபர்களுக்கு தன் நிழலின் கீழ் அடைக்கலம் கொடுப்பான். அவர்களில் முதலாமவர், நீதியுடன் ஆட்சி நடத்தும் தலைவர் ஆவார் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அதாவது நீதிக்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது.

**ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

கியாமத் நாளின் போது மக்களிலேயே அல்லாஹ்விற்கு மிக அதிக நெருக்கத்தில் இருப்பவர் நீதியை விரும்பும் ஆட்சியாளரே ஆவார். மேலும் இறைவனுக்கு மிகவும் பிடிக்காதவரும் அவனை விட மிகத் தொலைவிலும் இருப்பவர் அநீதியிழைக்கும் ஆட்சியாளராவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. மக்களை கவனிப்பதற்கான பொறுப்பாளராக ஒருவரை அல்லாஹ் நியமித்தால் அவர் தம் மக்களை கவனிக்கும் பொறுப்பில் கவனக்குறைவு காட்டி தன் கடமையை அவர் சரியாக செய்யவில்லை என்றால் அவர் மரணித்த பின் அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தை ஹராமாக ஆக்கி விடுகிறான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பு ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் அறிவிப்பதாக இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்களிடம் ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு அவர்கள் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இந்த வீட்டில் வைத்து இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். அதை உங்களுக்கு சொல்கிறேன்: அல்லாஹ்வே! என் சமுதாயத்திற்கு ஆட்சியாளராக நியமிக்கப்பட்ட ஒருவர் தம் மக்களிடம் கடினமாக நடந்து கொண்டால் நீயும் அவருடன் கடினமாக நடந்து கொள்வாயாக! மேலும் என் சமுதாயத்திற்கு ஆட்சியாளராக நியமிக்கப்பட்ட நபர் தம் மக்களிடம் மென்மையுடன் நடந்து கொண்டால் நீயும் அவருடன் மென்மையாக நடந்து கொள்வாயாக! என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இது ஒரு துஆவாகும்.

ஆக இதுவே நாம் சிந்திக்க வேண்டிய முக்கிய அம்சங்களாகும். ஆட்சியாளர்கள் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் நிழலின் கீழ் அடைக்கலம் வேண்டுமென்றால் நீங்கள் முஸ்லிம் என்று வாதம் புரிகிறீர்கள் என்றால் நிச்சயமாக இதை விரும்புவீர்கள். எனவே நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்கு விருப்பமானவர்களாக இருக்க வேண்டுமென்றால் அநீதியை முற்றிலும் நிறுத்த வேண்டும். சுயநலத்தை விட்டு முற்றிலும் விலகியவாறு சொர்க்கம் செல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் எவ்வித பாகுபாடுமின்றி எல்லாருடனும் சிறந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் நரகம் உங்களது தங்குமிடமாகும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இறுதியாக கூறப்பட்ட ஹதீஸ் ஒரு துஆவாகும். அதாவது அல்லாஹ்வே! கடினம் காட்டக்கூடிய தலைவர் மீது நீயும் கடினம் காட்டுவாயாக! மென்மையாக நடந்து கொள்பவருடன் நீயும் மென்மையாக நடந்து கொள்வாயாக! என்ற இந்த துஆ ஈமான் கொண்ட நபரை நடுங்க வைக்கும் ஒரு துஆவாகும். நமது முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு அல்லாஹ் நல்லறிவை வழங்குவானாக! இவர்கள் சிந்தித்துப் புரிந்து கொள்பவர்களாக இருப்பார்களாக!

பொதுமக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் என்ன கட்டளை இட்டுள்ளர்கள்? ஆட்சியாளர்களுடன் நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும். இதுபற்றி சில ஹதீஸ்களை நான் எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் ஸைத் பின் லஹப் கூறுகிறார்கள்: நான் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) இவ்வாறு கூறியதைக் கேட்டேன். அவர் கூறினார்:

எனக்குப் பிறகு உங்களது உரிமையைப் புறக்கணித்து விட்டு அந்நியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதை நீங்கள் காண்பீர்கள். மேலும் நீங்கள் விரும்பாத காரியங்கள் நிகழக் காண்பீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! அப்படிப்பட்ட நிலையில் உங்களது கட்டளை என்ன? என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அப்போது இருக்கும் ஆட்சியாளர்களுக்கு அவர்களுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். இவ்வனைத்தையும் பார்த்த பிறகும் கூட நீங்கள் ஆட்சியாளர்களுக்கு உரிய உரிமையைச் செலுத்துங்கள். நீங்கள் உங்களுடைய உரிமையை அல்லாஹ்விடம் வேண்டுங்கள் என்று கூறினார்கள்.

இந்த போராட்டங்கள் மற்றம் வன்முறைகள் செய்து உரிமைகளை மீட்பதற்கு அனுமதி கிடையாது. அல்லாஹ்விடம் உரிமையை வேண்டினால் உலகத்தின் பார்வை கூட சற்றும் எட்டாத இடத்திலிருந்து அல்லாஹ் தீர்ப்பு வழங்குவான்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. ஒரு சஹாபி ரஸூல் (ஸல்) அவர்களிடம் கேட்டார். அல்லாஹ்வின் தூதரே! தமது உரிமைகளை எங்களிடம் கோரி, எங்களது உரிமைகளை எங்களுக்கு செலுத்திடாத ஆட்சியாளர்கள் எங்கள் மீது ஆட்சி புரிந்தால் இந்த சூழ்நிலையில் தாங்கள் எங்களுக்கு என்ன கட்டளையிடுகிறீர்கள்? என்று கேட்டார்.

என்னிடமும் அரபு அஹ்மதிகள் இவ்வாறு கேட்கின்றனர்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது முகத்தை திருப்பிக் கொண்டார்கள். அவர் மீண்டும் தம் கேள்வியைக் கேட்டார். அவர்கள் மீண்டும் முகம் திருப்பினார்கள். அவர் மீண்டும் இந்த கேள்வியைப் பிடிவாதமாகக் கேட்டார். இதைப் பார்த்த அஷ்அஷ் பின் கைஸ் அவரைப் பின்னால் இழுத்தார். அவரை அமைதிப்படுத்த முயற்சி செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த கேள்வி பிடிக்கவில்லை. எனவே நீர் அந்த கேள்வியைக் கேட்க வேண்டாம். பின்னால் வந்து விடும் என்ற அர்த்தத்தில் அவர் பின்னால் இழுத்தார். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்கள் ஆட்சியாளர்களுக்கு கட்டுப்பட்டு நடங்கள். அவர்களுக்கு கீழ்படியுங்கள். அவர்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்கு அவர்களிடம் கேள்வி கேட்கப்படும். உங்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்கு நீங்கள் கேள்வி கேட்கப்படுவீர்கள் என்று கூறினார்கள்.

இன்னொரு ஹதீஸ் இவ்வாறு வருகிறது. நாதாபின் அபி உமைய்யா அறிவிக்கிறார். ஒருமுறை நாங்கள் உபாதா பின் சாமித்தை சந்திக்கச் சென்றோம். அவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். அவரிடம் நாங்கள் அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! நீங்கள் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்ட ஒரு ஹதீஸை எங்களுக்கு கூறுங்கள். இதன் காரணமாக அல்லாஹ் உங்களுக்கு நற்பலன் தருவானாக என்று கூறினோம். அதற்கு அவர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை அழைத்து வர ஆள் அனுப்பினார்கள். நாங்கள் அவர்களிடம் பைஅத் செய்தோம். அந்த பைஅத்தில் நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும், கஷ்டமான நிலையாக இருந்தாலும் அல்லது இன்பமான நிலை இருந்தாலும் எந்த நிலையாக இருந்தாலும் எங்களது உரிமைகள் பறிக்கப்பட்டாலும் கட்டளையை செயியேற்போம்; கட்டுப்படுவோம் என்று பைஅத் வாங்கினார்கள். ஆட்சியாளர்களுடன் சண்டையிட மாட்டோம். ஆட்சியாளர்கள் வெளிப்படையாக நிராகரிப்பவர்களாக இருந்து அதற்காக அவர்களுக்கு எதிராக அல்லாஹ்வின் புறமிருந்து உங்களிடம் ஆதாரம் இருந்தாலொழிய அவருடன் சண்டையிட மாட்டோம் என்று எங்களிடம் உடன்படிக்கை வாங்கினார்கள் என்று கூறினார்.

அதாவது இன்றைய காலத்தின் ஆலிம்கள் குஃப்ர் ஃபத்வா கொடுப்பது போல் அல்லாமல் குஃப்ருக்கான ஆதாரம் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் புறமிருந்து இதை கூறினார்கள். அதாவது இது ஹதீஸே குத்ஸியாகும். அவர்கள் கூறினார்கள்:

என் அடியார்களே! நான் அநீதியிழைப்பதை எனக்கு ஹராமாக்கியுள்ளேன். உங்களுக்கும் நான் அதை ஹராமாக்கி உள்ளேன். ஆகவே நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அநீதியிழைக்காதீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஆகவே அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்து கொண்டிருங்கள். ஆட்சியாளர்களின் விவகாரம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. நீங்கள் துஆ செய்து வாருங்கள். நான் கூறியது போன்று ஆட்சியாளர்களின் குஃப்ர் என்பது சரீஅத்தின் தெளிவான கட்டளைகளுக்கு புறம்பாக இருக்கும் பட்சத்தில் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இதற்காக சுய விளக்கங்கள் கொடுக்கக் கூடாது. உதாரணத்திற்கு பாகிஸ்தானில் அஹ்மதிகளுடன் இவ்வாறு நடக்கிறது. அதாவது அஹ்மதிகள் கலிமா சொல்லக் கூடாது; தொழக் கூடாது; ஸலாம் சொல்லக் கூடாது என்று இவர்கள் சட்டம் இயற்றி வெளிப்படையாக இவர்கள் சரீஅத்திற்கு எதிராக நடக்கும்படி நம்மை கட்டாயப்படுத்துகின்றனர். ஆகவே இதற்கு கீழ்படியக் கூடாது. இது தவிர நாட்டின் பிற சட்டதிட்டங்களைப் பேண வேண்டும்.

ஆகவே எல்லா போதனைகளின் சராம்சமும் இந்த கடைசி ஹதீஸில் உள்ளது. அதாவது ஒருவருக்கொருவர் அநீதியிழைக்கக் கூடாது. ஆட்சியாளர்கள் பொதுமக்கள் மீது அநீதியிழைக்கக் கூடாது. அவ்வாறே பொதுமக்கள் தமது உரிமையை மீட்பதற்காக அநீதியுடன் நடந்து கொள்ளும் எந்த செயலையும் செய்யக்கூடாது. இது ஆட்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரு சகோதரருக்கும் பொதுவான போதனையாகும். ஆனால்

அவர்கள் இந்த போதனையின் படி செயல்படுகிறார்களா? ஆட்சியாளர்கள் நீதியின் உயர் தரத்தை நிறைவேற்றுகின்றார்களா? அவர்கள் தமது ஒவ்வொரு முடிவிலும் அல்லாஹ்வை சாட்சியாக்கி அவனது போதனையின்படி செயல்படுகிறார்களா? அவ்வாறே பொதுமக்களும் ஆட்சியாளர்களின் கட்டளைகளுள் சரீஅத்திற்கு நேர் மாற்றமானவற்றை தவிர்த்து பிறவற்றிற்கு கட்டுப்படுகின்றார்களா? அநீதியிழைக்கும் ஆட்சியாளர் –களுக்கு எதிராக தமது இறைவனிடம் மட்டும் மன்றாடுபவர்களாக உள்ளார்களா? இன்று உலகில் இதை செய்பவர்களை அஹ்மதிகளைத் தவிர வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.

அவ்வாறில்லையென்றால் இக்காலக்கட்டத்தில் நாம்

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ *நிலத்தலும், கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. (30:42)*

என்ற அந்த நிலைக்கே நாம் திரும்பி விடுவோம். முஸ்லிம்களுக்கு இந்த காலகட்டம் வர வேண்டியது அவசியமாகும். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் காலத்திலும் இவ்வாறான நிலையே ஏற்பட வேண்டும் என்று இருந்தது.

ஆகவே முஸ்லிம் ஆட்சியாளர்களும் முஸ்லிம் பொதுமக்களும் இதை கவனத்தில் கொண்டு சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். குழப்பத்தைப் போக்குவதற்காக அல்லாஹ் கூறிய வழிமுறைகளின்படி அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபரைத் தேடுங்கள். அவரது போதனையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். சிரியா மக்கள் குறிப்பாகவும் முஸ்லிம் மக்கள் பொதுவாகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வந்த இந்த இல்ஹாமை மட்டும் சிந்தித்துப் பாருங்கள். அந்த இல்ஹாம் 'பலாயே தமிஷ்க்' என்பதாகும். இதை மட்டும் சிந்தித்தாலே இவர் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்ட நபர் ஆவார் என்பது தெரிந்து விடும். அவர் கூறும் கருத்துக்களை செவிதாழ்த்திக் கேளுங்கள். இல்லையென்றால் இன்று அல்லாஹ்வால் அனுப்பப் –பட்டவரைத் தவிர வேறு யாரும் வழிகாட்டுபவர் இல்லை.

நாடுகளின் இந்தப் போக்கின் காரணமாக மார்க்க தீவிரவாத அமைப்புகள் அல்லது மார்க்கத்தின் பெயரால் தம் அரசை நிறுவியுள்ளோம் என்று கூறுகின்ற அமைப்புகள் தம் சுய இலாபத்தை மட்டும் அடைகின்றன. அதன் பிறகு ஏற்படும் கலவரத்தின் தீவிரம் எண்ணிக் கூட பார்க்க முடியாத அளவு கடுமையாக இருக்கும்.

இறைவன் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் நல்லறிவை வழங்குவானாக! பொது மக்களுக்கும் நல்லறிவை வழங்குவானாக!

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَى *அதாவது நன்மை மற்றும் இறையச்சத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்பவர்களாக இருக்க வேண்டும் (5:3)* என்ற இறை போதனையின் கருத்தைப் புரிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும். நன்மை மற்றும் இறையச்சத்தில் முன்னேறுபவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் அன்பைப் பரப்புபவர்களாக இருக்க வேண்டும். உள்ளங்களை வெல்பவர்களாக இருக்க வேண்டும்.

அரசு நடத்துவது உள்ளத்தை வெற்றி கொள்ளாமல் சாத்தியமில்லை. பொதுமக்களின் உரிமைகளைச் செலுத்தாமல் சாத்தியமில்லை. ஒவ்வொரு முஸ்லிம் தலைவரும் இந்தக் கருத்தைப் புரிந்து கொள்வது அவசியமாகும். நீங்கள் உங்கள் வரலாற்றைச் சற்று பாருங்கள். ஒரு காலம் இருந்தது. அப்போது முஸ்லிம் ஆட்சியாளர்களின் நீதியையும் நேர்மையையும் பார்த்து கிறிஸ்தவ பொதுமக்கள் இவ்வாறு துஆ செய்தனர். அதாவது எங்களுக்கு கிறிஸ்தவ ஆட்சியாளர்களிடம் இருந்து விரைவாக சுதந்திரம் கிடைத்து நாங்கள் மீண்டும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வர வேண்டும் என்றனர். ஆனால் இன்று நிலை எவ்வாறிருக்கிறது? முஸ்லிம்கள் முஸ்லிம் ஆட்சியாளர்கள் மூலமே அநீதியுடன் நடத்தப்படுகின்றனர்.

48:30 رُحَمَاءُ بَيْنَهُمْ என்பதற்குப் பதிலாக தலைகள் துண்டிக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் கிறிஸ்தவ நாடுகளில் சென்று அமைதியுடன் வாழ்வதற்காக அடைக்கலம் தேடி வருகின்றனர். நீதியைப் பெறுவதற்காக ஓடுகின்றனர். சுதந்திரமாக வாழ்க்கை நடத்துவதற்காக ஓடுகின்றனர். அந்தோ! முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் தம் பொறுப்புகளைப் புரிந்து கொள்ள வேண்டுமே!

எப்படியாவது நமது தூதுச் செய்தி இவர்களைச் சென்று அடைய வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! இதே போன்று மேற்கத்திய நாடுகள் மற்றும் பெரிய சக்திகள் வரை நமது இந்த தூதுச் செய்தி சென்று சேர வேண்டும். நான் கூறியது போன்று இதற்கு முன்னரும் இந்த தூதுச் செய்தியை பல்வேறு வழிமுறைகளில் அவர்களுக்கு எட்ட வைத்துள்ளேன். சிரியாவுக்கு எதிரான இந்த நடவடிக்கை முழு உலகையும் ஆக்ரமித்துக் கொள்ளும். இது வெகு தூரம் இல்லை. ஆகவே ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கும் அஹ்மதிகள் தத்தமது நாட்டுடன்

விசுவாசத்துடன் நடந்து கொள்ளும் முறை இதுவாகும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் ஒவ்வொரு அஹ்மதியும் வரவிருக்கும் பேரழிவைக் குறித்து ஒவ்வொரு அரசியல் தலைவரையும் எச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை உலகிற்கு வழங்க அல்லாஹ்விடம் துஆ செய்கிறோம். அரசுகளும் பொதுமக்களும் தத்தமது உரிமைகளை சரியாக செலுத்திட நல்வாய்ப்பை நல்குவானாக! உள்நாட்டுப் போரை கைவிட்டு விட்டு இந்த பேரழிவிலிருந்து அவர்கள் தம்மை காத்துக் கொள்வார்களாக! ஐரோப்பா மற்றும் அமெரிக்க ஆட்சியாளர்களின் கண்களை இறைவன் திறப்பானாக! அவர்கள் நீதியுடனும் நேர்மையுடனும் நடந்து கொள்வார்களாக! அநீதியை விட்டு விலகுவார்களாக! அவர்கள் சின்னஞ்சிறு நாட்டின் உரிமைகளையும் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். எந்தவொரு நாட்டிற்கும் உதவி செய்வது சுயநலத்தை முன்னிட்டு அமையக் கூடாது. மாறாக உரிமையைச் சரியாகச் செலுத்தும் நோக்கத்திற்காக உதவி புரிய வேண்டும்.

இந்த நிலையின் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் ஜமாஅத் உறுப்பினர்களை அல்லாஹ் காப்பாற்றுவானாக! குறிப்பாக சிரியாவில் பல அஹ்மதிகள் இதனால் பாதிக்கப்படுகின்றனர். அல்லாஹ் சிரியா தொடர்பாக அச்சுறுத்தும் விதமாக ‘பலாயே தமிஷ்க்’ என்ற ஒரு இல்ஹாமை இறக்கியுள்ளான். அவ்வாறே தனது நற்செய்தி அடங்கிய இல்ஹாமையும் பூர்த்தி செய்வானாக! மேலும் நமது கண்களுக்கு குளிர்ச்சியூட்டுவானாக!

**அந்த இல்ஹாமில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:**

يدعون لك أبدال الشام وعباد الله من العرب அதாவது உமக்காக சிரியாவைச் சேர்ந்த மேன்மையுடையோரும் அரசைச் சேர்ந்த அடியார்களும் துஆ செய்கின்றனர்.

முழு அரபு நாடும் விரைவாக முஹம்மதிய மஸீஹின் கொடியின் கீழ் வருபவர்களாக இருக்க அல்லாஹ் அருள் செய்வானாக! இதனால் உலகம் Arab Spring என்று பெயர் வைத்துள்ள இந்த அரபு நாடுகளின் நிம்மதியின்மை, ஆன்மீக அருள்களின் ஊற்றாக மாறி விட வேண்டும். இந்த மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக துஆ செய்பவர்களாக ஆக வேண்டும். அவர்களோடு இணைந்து இஸ்லாத்தின் உண்மையான போதனையாகிய அன்பு, நேசம் மற்றும் அமைதியின் போதனையை உலகில் பரப்புபவர்களாக ஆகிவிட வேண்டும்.

நமது பொறுப்புகளை நாம் புரிந்து கொள்ளவும் அவற்றை சரியாக நிறைவேற்றவும் அல்லாஹ் நமக்கும் நல்வாய்ப்பு நல்குவானாக! நாம் அல்லாஹ்வின் அருள்களை ஈர்ப்பவர்களாக இருக்க வேண்டும். உலகத்தை எப்போதும் சத்தியத்தின் பால் வழிநடத்துபவர்களாக இருப்போமாக! அமைதி மற்றும் நீதியை நிலைநாட்டுபவர்களாக இருப்போமாக! இந்த போதனையைப் பரப்புபவர்களாக இருப்போமாக! மேலும் அல்லாஹ் உலகத்தையும் போரின் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றுவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at **BAIT-UL-FUTUH Mosque,** London
on **13.09.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456